## பொங்கலூர் நா.பழனிசாமி

ஊரகத் தொழில்துறை அமைச்சர்



### முன்னுரை

தமிழகத்தின் பொருளாதாரத்தை முன்னேற்ற, இந்தியத் திருநாட்டிற்கே எடுத்துக்காட்டாகப் பல்வேறு சிறப்பு திட்டங்களைச் செயல்படுத்தி வெற்றி கண்டு வரும் நமது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் மேலும் ஒரு மைல் கல்லாக, தமிழகத்தில் வேலைவாய்ப்பை அதிக அளவில் அளிக்கவல்ல குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்காக, தமிழக வரலாற்றிலேயே முதன்முறையாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கை 2008ஐ அறிவித்துள்ளார்கள். இக்கொள்கையில் உள்ள சலுகைத் திட்டங்கள் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் 11வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் 10 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு, மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் ஆண்டு வளர்ச்சி விகிதத்தை 10 விழுக்காட்டிற்கும் அதிகமாக உயர்த்துதல்-என்பதன் அடிப்படையில் பல்வேறு மான்யத் திட்டங்கள் மற்றும் சலுகைகளை நமது மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்காக அறிவித்துள்ளார்கள்.

இந்தத் தன்னிகரற்ற தொழில் கொள்கையின் பலன்களைத் தொழில் முனைவோர்கள் சுலபமாகப் புரிந்து கொண்டு பயன்பெற ஏதுவாக கேள்வி பதில்கள் என்ற வடிவில் இக்கையேட்டினை தொகுத்து வழங்கியுள்ளோம். இக்கையேட்டில் உள்ள தகவல்களை முதன்மைத் தகவல்களாக மட்டும் எடுத்துக் கொண்டு தொழில் ஆரம்பிக்கும் முன்னர் இக்கொள்கை தொடர்பான அரசு ஆணையையும் படித்து பார்த்து நடவடிக்கை மேற்கொண்டு தொழில் துவங்கி தாங்கள் முன்னேறுவதுடன் நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் ஈடுபடுத்திக் கொண்டு வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.

தங்கள் அன்புள்ள,

(பொங்கலூர் நா. பழனிசாமி)

**கேள்வி 1 :** 'குறு உற்பத்தி நிறுவனங்கள்' என்றால் என்ன ?

**பதில்:** ரூ.25 இலட்சத்திற்கு மிகாத அளவில் இயந்திரங்களை நிறுவி உற்பத்தியில் ஈடுபட்டு வரும் நிறுவனங்கள் குறு உற்பத்தி நிறுவனங்களாகும்.

**கேள்வி 2:** 'சிறு உற்பத்தி நிறுவனங்கள்' என்றால் என்ன ?

**பதில்:** ரூ.5 கோடிக்கு மிகாத அளவில் இயந்திரங்களை நிறுவி உற்பத்தியில் ஈடுபட்டு வரும் நிறுவனங்கள் சிறு உற்பத்தி நிறுவனங்களாகும்.

**கேள்வி 3:** 'நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள்' என்றால் என்ன ?

**பதில்:** ரூ.10 கோடிக்கு மிகாத அளவில் இயந்திரங்களை நிறுவி உற்பத்தியில் ஈடுபட்டு வரும் நிறுவனங்கள் நடுத்தர உற்பத்தி நிறுவனங்களாகும்.

**கேள்வி 4:** 'குறு சேவை நிறுவனங்கள்' என்றால் என்ன ?

**பதில்:** ரூ.10 இலட்சத்திற்கு மிகாத அளவில் இயந்திரங்களை நிறுவி சேவைத் தொழிலில் ஈடுபட்டு வரும் நிறுவனங்கள் குறு சேவை நிறுவனங்களாகும்.

**கேள்வி 5:** 'சிறு சேவை நிறுவனங்கள்' என்றால் என்ன ?

**பதில்:** ரூ.2 கோடிக்கு மிகாத அளவில் இயந்திரங்களை நிறுவி சேவைத் தொழிலில் ஈடுபட்டு வரும் நிறுவனங்கள் சிறுசேவை நிறுவனங்களாகும்.

**கேள்வி 6:** 'நடுத்தர சேவை நிறுவனங்கள்' என்றால் என்ன ?



**பதில்:** ரூ.5 கோடிக்கு மிகாத அளவில் இயந்திரங்களை நிறுவி சேவைத் தொழிலில் ஈடுபட்டு வரும் நிறுவனங்கள் நடுத்தர சேவை நிறுவனங்களாகும்.

**கேள்வி 7:** குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு அரசு அளிக்கும் முன்னுரிமைகள் மற்றும் சலுகைகள் யாவை ?

**பதில்:** தமிழக வரலாற்றிலேயே முதன்முறையாக தமிழக அரசு 22.2.2008 அன்று குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்காக பல்வேறு சலுகைகள், மானியத் திட்டங்கள் மற்றும் முன்னுரிமைகள் அடங்கிய விரிவான "குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் கொள்கை 2008"ஐ வெளியிட்டுள்ளது.

**கேள்வி 8:** ஒரு தொழில் துவங்க முதன்முதலாக ஒரு தொழில் முனைவோர் செய்ய வேண்டியது என்ன ?

**பதில்:** ஒரு தொழில் முனைவோர், தாம் எந்த தொழிலை செய்ய விரும்புகிறாரோ அந்த தொழில் சம்மந்தமான கள ஆய்வு செய்து தொழிலை தேர்வு செய்தபின் சம்மந்தப்பட்ட மாவட்ட தொழில் மையத்தில் தொழில்முனைவோர் பதிவறிக்கை (பகுதி 1) ஒப்புகை எண் பெற வேண்டும். இந்த ஒப்புகை சான்று மாவட்ட தொழில் மையங்களில் இலவசமாக வழங்கப்படுகிறது. இதற்கான விண்ணப்பங்கள் www.smallindustryindia.com, www.laghuudyog.com மற்றும் www.indcom.tn.gov.in என்ற இணையதளமுகவரியில் பெறலாம்.

**கேள்வி 9:** குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு அரசு வழங்கும் மானிய விவரங்களை எங்கு பெறலாம் ?

**பதில்:** தமிழக அரசு அறிவித்துள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் கொள்கை 2008 புத்தகத்தில் அனைத்து மானிய சலுகை விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த கொள்கை விவரங்களை www.indcom.tn.gov.in. என்ற இணையதள முகவரியிலும் பார்த்து தெரிந்து கொள்ளலாம். மேலும் சம்மந்தப்பட்ட மாவட்டங்களில் உள்ள மாவட்ட தொழில் மையங்களையும் அணுகி பெற்றுக் கொள்ளலாம். (மாவட்ட தொழில் மைய முகவரிகள் இணைப்பு 1ல் தரப்பட்டுள்ளது).

**கேள்வி 10:** குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு வங்கி கடன் வழங்கலில் முன்னுரிமை அளிக்கப்படுகிறதா ?

**பதில்:** குறு மற்றும் சிறு தொழில்களுக்கு வழங்கப்படும் வங்கி கடன்கள், முன்னுரிமை கடன்களின் பட்டியலில் பண்ணைசாரா கடன் என்ற தலைப்பின் கீழ் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. மேலும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கையில் அறிவிக்கப்பட்டுள்ள மானியங்களின் காரணமாக வங்கிகள் விரைந்து கடன் வழங்க வழிவகை ஏற்பட்டுள்ளது.

**கேள்வி 11:** ஒரு தொழில் துவங்குவதற்கு பிணையம் இல்லாமல் மானியத்துடன் கூடிய கடன் பெற முடியுமா ?

**பதில்:** "கடன் ஈட்டுறுதி நிதித் திட்டம்" (CGFTS) என்ற திட்டத்தின் கீழ் ரூ.50 இலட்சம் வரை பிணையம் இல்லாமல் வங்கிகளிடமிருந்து கடன் பெற வாய்ப்புள்ளது.

**கேள்வி 12:** ஒரு சேவைச்சார்ந்த தொழில் துவங்குவதற்கும் CGFTS திட்டத்தில் பிணையம் இல்லாத கடன் பெற வாய்ப்புள்ளதா ?



**பதில்:** ஆம் சேவைச்சார்ந்த தொழில்களும் CGFTS திட்டத்தின் கீழ் கடன் பெற முடியும்.

**கேள்வி 13:** CGFTS என்ற திட்டத்தின் கீழ் பிணையம் இல்லாத கடன் பெற சிறப்பு கட்டணம் ஏதாவது செலுத்த வேண்டுமா ?

**பதில்:** திட்ட மதிப்பீட்டில் 2 சதவீதம் UPFRONT கட்டணம் செலுத்த வேண்டும். மேலும் ஆண்டுதோறும் 1 சதவீதம் கட்டணம் செலுத்த வேண்டும் . எனினும் மகளிர் தொழில்முனைவோர்களுக்கு இக்கட்டணத்தில் சலுகை உண்டு.

**கேள்வி 14:** தமிழக அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர கொள்கையின் நோக்கம் என்ன ?

**பதில்:** பதினோராவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் 10 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களின் ஆண்டு வளர்ச்சியை 10 சதவீதத்தை மிஞ்சும் அளவிற்கு கொண்டுவர வேண்டும் என்ற அடிப்படையிலும் இக்கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது.

**கேள்வி 15:** ஒரு தொழில் துவங்கிய பின் அரசின் மானியப் பலன்களை பெறுவதற்கு யாரை அணுக வேண்டும் ?

**பதில்:** ஒரு தொழில் முனைவோர், தொழில் துவங்கிய உடன் சம்பந்தப்பட்ட மாவட்ட தொழில் மைய பொது மேலாளரை அணுகி மானியங்களை பெறுவதற்கான விண்ணப்பங்களை பெற்று விண்ணப்பத்தை பூர்த்தி செய்து சமர்ப்பித்து மானியங்களை பெறலாம்.

**கேள்வி 16:** குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் கொள்கை 2008ல் குறுந்தொழில்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள மானிய சலுகைகள் யாவை ?

**பதில்:** குறுந்தொழில் நிறுவனங்கள் மாநிலத்தின் எந்த பகுதியிலும், அதாவது நகராட்சி, மாநகராட்சி உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் ஆரம்பிக்கப்பட்டாலும் தமிழக அரசின் கீழ்க்கண்ட மானிய சலுகைகள் பெற தகுதி உடையவையாகும்.

- 15 சதவீதம் முதலீட்டு மானியம்
- 3 ஆண்டுகளுக்கு 20 சதவீதம் மின் மானியம்
- 6 ஆண்டுகளில் செலுத்தப்படும் மதிப்பு கூட்டு வரிக்கு ஈடான தொகைக்கு மானியம் – ஆகிய மானிய உதவிகள் வழங்கப்படும்.

**கேள்வி 17:** குறுந்தொழில் நிறுவனங்கள், வங்கிகளில் கடன் பெறுவதை எளிதாக்க அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

**பதில்:** ஆம் . குறுந்தொழில் நிறுவனங்கள், தங்கள் ஆவணங்களை பிணையம் வைத்து வங்கிகளிடமிருந்து கடன் பெறும்பொழுது அத்தகைய ஆவணங்களை பதிவு செய்வதற்கான முத்திரை தாள் கட்டணத்திற்கான முழு விலக்கினை தமிழக அரசு அறிவித்துள்ளது.

**கேள்வி 18:** குறுந்தொழில் நிறுவனங்களுக்கு தொழிற் பேட்டைகளில் தொழில் மனை ஒதுக்கீட்டிற்கு முன்னுரிமை உள்ளதா ?



**பதில்:** ஆம். குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் கொள்கையின் படி சிட்கோ (SIDCO) தொழிற்பேட்டைகளில், தொழில் மனைகளுக்கான இட ஒதுக்கீட்டின் பொழுது 30 சதவீத விழுக்காடு குறுந்தொழில்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கேள்வி 19:** குறுந்தொழில் நிறுவனங்களுக்கு அடுக்குமாடி தொழில் நிறுவனங்கள் ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

**பதில்:** ஆம். குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் கொள்கையின் படி குறு உற்பத்தி நிறுவனங்களுக்காக சென்னை அருகே 3 இடங்களில் அடுக்குமாடி தொழில் கூடங்கள் அமைப்பதற்கான ஆரம்ப கட்ட ஆய்வுபணிகள் நடைபெற்று வருகிறது.

**கேள்வி 20:** தமிழ்நாட்டில் சிட்கோ தொழிற்பேட்டைகள் எத்தனை உள்ளன ? அதில் உள்ள காலிமனை விவரங்களை எங்கே பெறலாம் ?

**பதில்:** தமிழ்நாட்டில் 78 சிட்கோ தொழிற்பேட்டைகள் உள்ளன. இதில் 9175 மனைகள் மற்றும் தொழில்கள் உருவாக்கப்பட்டு 8559 மனைகள் மற்றும் தொழில் கூடங்கள் தொழில்முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. 616 மனைகள் மற்றும் தொழில் கூடங்கள் காலியாக உள்ளது. இதன் விவரம் www.sidco.tn.gov.in என்ற இணையதள முகவரியில் பெறலாம்.

**கேள்வி 21:** தமிழ்நாட்டில் புதிய சிட்கோ தொழிற்பேட்டைகள் எங்கெங்கு ஆரம்பிக்கப்பட உள்ளன ?

**பதில்:** புதியதாக 22 சிட்கோ தொழிற்பேட்டைகள் ஆரம்பிக்கப்பட்டு, தமிழ்நாட்டில் 100 தொழிற்பேட்டைகள் என்ற இலக்கை நோக்கி

தொழிற்பேட்டைகள் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. புதிய தொழிற்பேட்டை அமைய உள்ள இடங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

- காக்களூர், திருவள்ளூர் மாவட்டம்
- கடகத்தூர், தர்மபுரி மாவட்டம்
- விண்ணமங்கலம், வேலூர் மாவட்டம்
- போளுபள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்
- பர்கூர், கிருஷ்ணகிரி மாவட்டம்
- கப்பலூர், மதுரை மாவட்டம்
- வாழவந்தான்கோட்டை, திருச்சி மாவட்டம்
- எளம்பலூர், பெரம்பலூர் மாவட்டம்
- கும்பக்குடி, திருச்சி மாவட்டம்
- ஆசனூர், விழுப்புரம் மாவட்டம்
- மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டம்
- தண்டரை, காஞ்சிபுரம் மாவட்டம்
- சங்ககிரி, சேலம் மாவட்டம்
- சேடப்பட்டி, மதுரை மாவட்டம்
- கண்டியன் கோவில், கோயம்புத்தூர் மாவட்டம்
- வைப்பூர், திருவாரூர் மாவட்டம்
- போளூர், திருவண்ணாமலை மாவட்டம்
- அரக்கோணம் பகுதி -II, வேலூர் மாவட்டம்
- மொடக்குறிச்சி, ஈரோடு மாவட்டம்
- வள்ளியூர் கட்டம் 2, திருநெல்வேலி மாவட்டம்
- வடமுகம் காங்கேயம் பாளையம், ஈரோடு மாவட்டம்
- புதுக்கோட்டை சிட்காட் வளாகம், புதுக்கோட்டை மாவட்டம்



**கேள்வி 22:** குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் கொள்கை 2008ல் தனியார் மூலம் தொழிற்பேட்டை உருவாக்க சலுகைகள் உள்ளதா ?

**பதில்:** சென்னை நகரின் மையப் பகுதியிலிருந்து 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால், 50 ஏக்கர் மற்றும் அதற்கு அதிகமான அளவு பரப்பில் அமையும் தனியார் தொழிற்பேட்டை அமைவிற்கான அடிப்படை கட்டுமான செலவில் 20 சதவீதம் அதிகபட்சமாக ரூ.1 கோடி வரை உட்கட்டமைப்பு மானியம் வழங்கப்படும்.

**கேள்வி 23:** குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் கொள்கை 2008ன் படி தமிழகத்தில் உள்ள அனைத்து சிட்கோ மற்றும் சிப்காட் தொழிற்பேட்டைகளில் ஆரம்பிக்கப்படும் தொழில்களுக்கு பின்தங்கிய வட்டாரம் என்ற வரையறையின்றி மானியம் வழங்கப்படுமா ?

**பதில்:** தமிழகத்தில், சென்னையில் இருந்து 50 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள அனைத்து சிட்கோ மற்றும் சிப்காட் தொழிற்பேட்டைகள் பின்தங்கிய வட்டாரங்கள் என அங்கீகரிக்கப்பட்டு அப்பகுதிகளில் ஆரம்பிக்கப்படும் அனைத்து வகையான குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு, பின்தங்கிய பகுதிகளுக்கான தொகுப்பு மானிய சலுகை அனைத்தும் வழங்கப்படும். மேலும் தொழிற்பேட்டைகளுள் வாங்கப்படும் நிலங்களின் முத்திரைத்தாள் மற்றும் பதிவு கட்டணத்தில் 50 சதவீதம் தள்ளுபடி வழங்கப்படும்.

**கேள்வி 24:** குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் கொள்கை 2008ல் எந்தெந்த வட்டாரங்கள் பின்தங்கிய பகுதிகளாக அங்கீகரிக்கப்பட்டு மானியம் பெற தகுதி உள்ள இடங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன ?

**பதில்:** தமிழகத்தில் உள்ள 385 வட்டாரங்களில், 251 வட்டாரங்கள் பின்தங்கிய வட்டாரங்களாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் விவரம் இணைப்பு 2ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கேள்வி 25:** பின்தங்கிய பகுதிகளில் ஆரம்பிக்கப்படும் தொழில்களுக்கு

(அ) எவ்வகையான மானியங்கள் வழங்கப்படும் ?

(ஆ) மான்யம் பெற தகுதி இல்லாத தொழில்கள் எவை ?

**பதில்:** (அ) குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் கொள்கை 2008ன் படி பின்தங்கிய வட்டாரங்களில் ஆரம்பிக்கப்படும் அனைத்து வகையான குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்களுக்கு கீழ்க்கண்ட மானியத் தொகை பெற வழி வகை செய்யப்பட்டுள்ளது.

- 15 சதவீதம் மூலதன மானியம் (அதிகபட்சம் ரூ.30 இலட்சம் வரை)
- 25 நபர்களுக்கு குறையாத அளவில் பணியமர்த்தி உள்ள நிறுவனங்களுக்கு கூடுதலாக 5 சதவீதம் மானியம் (அதிகபட்சம் ரூ.5 இலட்சம் வரை)
- சிறப்பு வகை தொழில்முனைவோர்களான மகளிர், பட்டியல் இனத்தோர், உடல் ஊனமுற்றோர், அரவாணிகள் ஆகியோர் தொழில் துவங்கும் பட்சத்தில் 5 சதவீதம் கூடுதல் மானியம் (அதிகபட்சம் ரூ.2 இலட்சம் வரை)
- மாசற்ற மற்றும் சுற்றுசூழலுக்கு உகந்த தொழில்நுட்ப இயந்திர தடவாளங்களுக்கு 25 சதவீதம் கூடுதல் மானியம் (அதிகபட்சம் ரூ.3 இலட்சம் வரை)



- மொத்த முதலீட்டு மானியம் (அதிகபட்சம் ரூ.40 இலட்சம் வரை) இதுதவிர
- உற்பத்தி துவங்கிய முதல் மூன்று ஆண்டுகளுக்கு 20 சதவீதம் மின்மானியம்

மேலும் பின்தங்கிய பகுதிகளில் தொழில்கள் ஆரம்பிக்க வாங்கப்படும் நிலத்திற்கு 50 சதவீதம் முத்திரைத்தாள் கட்டணம் மற்றும் பத்திர பதிவு கட்டண தள்ளுபடி சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) மான்யம் பெற தகுதியில்லா தொழில்கள் இணைப்பு 3–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**கேள்வி 26:** எவ்வகையான குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் தமிழகத்தின் எப்பகுதியில் ஆரம்பித்தாலும் முதலீட்டு மான்யம் பெற தகுதியுடைவையாக அறிவிக்கப்பட்டுள்ளன ?

**பதில்:**

- மின் மற்றும் மின்னணு பொருட்கள்
- தோல் மற்றும் தோல் பொருட்கள்
- வாகன உதிரி பாகங்கள்
- மருந்து மற்றும் மருந்து பொருட்கள்
- சூரிய சக்தி பயன்பாட்டு உபகரணங்கள்
- ஏற்றுமதிக்கான தங்கம் மற்றும் வைர நகைகள்
- மாசுக்கட்டுபாடு உபகரணங்கள்
- விளையாட்டு பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
- சிக்கன கட்டுமான பொருட்கள்
- ஆயத்த ஆடை தயாரிப்பு

ஆகிய தொழில்கள் சிறப்பு வகை தொழில்களாக அறிவிக்கப்பட்டு இவ்வகை தொழில்கள் தமிழகத்தின் எப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டாலும் 15 சதவீதம் முதலீட்டு மானியம் அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் வரை மானியம் வழங்கப்படும்.

இவ்வகை சிறப்பு வகைத் தொழில்கள், மின் மானியம், சிறப்பு வகை தொழில் முனைவோர் மானியம் வேலை வாய்ப்பு உருவாக்கும் மானியம், சுற்றுசூழலுக்கு உகந்த தொழில் நுட்ப தடவாளத்திற்கு மானியம் ஆகிய மானியங்கள் பெற இயலாது. எனினும் இவ்வகை சிறப்பு தொழில்கள் அரசு அறிவித்துள்ள 251 பின்தங்கிய வட்டாரங்களில் ஆரம்பிக்கப்படும் பொழுது கூடுதல் மானியங்கள் பெற தடை இல்லை.

**கேள்வி 27:** வேளாண் சார் தொழில்களுக்கு வழங்கப்பட்டுள்ள மானியச் சலுகைகள் என்ன ?

**பதில்:** தமிழகத்தில் உள்ள 385 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும் ஆரம்பிக்கப்படும் அனைத்து வேளாண்சார் தொழில்களுக்கும் தமிழக அரசு கீழ்க்கண்ட மானியங்கள் அறிவித்துள்ளது.

- 15 சதவீதம் மூலதன மானியம் (அதிகபட்சம் ரூ.30 இலட்சம் வரை)
- 25 நபர்களுக்கு குறையாத அளவில் பணியமர்த்தி உள்ள நிறுவனங்களுக்கு கூடுதலாக 5 சதவீதம் மானியம் (அதிகபட்சம் ரூ.5 இலட்சம் வரை)
- சிறப்பு வகை தொழில்முனைவோர்களான மகளிர், பட்டியல் இனத்தோர், உடல் ஊனமுற்றோர், அரவானிகள் ஆகியோர் தொழில் துவங்கும் பட்சத்தில் 5 சதவீதம் கூடுதல் மானியம் (அதிகபட்சம் ரூ.2 இலட்சம் வரை)



- மாசற்ற மற்றும் சுற்றுசூழலுக்கு உகந்த தொழில்நுட்ப இயந்திர தடவாளங்களுக்கு 25 சதவீதம் கூடுதல் மானியம் (அதிகபட்சம் ரூ.3 இலட்சம் வரை)
- மொத்த முதலீட்டு மானியம் (அதிகபட்சம் ரூ.40 இலட்சம் வரை) இதுதவிர உற்பத்தி துவங்கிய முதல் மூன்று ஆண்டுகளுக்கு 20 சதவீதம் மின்மானியம்

**கேள்வி 28:** பின்தங்கிய பகுதிகளில் மற்றும் தமிழகத்தில் உள்ள 385 வட்டாரங்களிலும் ஆரம்பிக்கப்படும் அனைத்து வகையான தொழில்களுக்கான மானியத்திட்டத்தில் மகளிருக்கு சிறப்பு சலுகை உள்ளதா ?

**பதில்:** இயந்திர தளவாட முதலீட்டில் 5 சதவீத கூடுதல் மானியம் ரூ2 இலட்சத்திற்கு மிகாமல் வழங்க அறிவிக்கப்பட்டுள்ளது.

**கேள்வி 29:** பின்தங்கிய பகுதிகளில் மற்றும் தமிழகத்தில் உள்ள 385 வட்டாரங்களிலும் ஆரம்பிக்கப்படும் அனைத்து வகையான தொழில்களுக்கான மானியத்திட்டத்தில் ‘ஆதிதிராவிடர் பழங்குடியினத்தவர்களுக்கு’ சிறப்பு சலுகை உள்ளதா ?

**பதில்:** இயந்திர தளவாட முதலீட்டில் 5 சதவீத கூடுதல் மானியம் ரூ2 இலட்சத்திற்கு மிகாமல் வழங்க அறிவிக்கப்பட்டுள்ளது.

**கேள்வி 30:** பின்தங்கிய பகுதிகளில் மற்றும் தமிழகத்தில் உள்ள 385 வட்டாரங்களிலும் ஆரம்பிக்கப்படும் அனைத்து வகையான தொழில்களுக்கான மானியத்திட்டத்தில் ‘உடல் ஊனமுற்றோருக்கு’ சிறப்பு சலுகை உள்ளதா ?

**பதில்:** இயந்திர தளவாட முதலீட்டில் 5 சதவீத கூடுதல் மானியம் ரூ2 இலட்சத்திற்கு மிகாமல் வழங்க அறிவிக்கப்பட்டுள்ளது.

**கேள்வி 31:** மூலதன மானியம் வழங்குவதில் 'நிலம் மற்றும் கட்டிடம்' ஆகியவற்றின் மதிப்பு சேர்க்கப்படுமா ?

**பதில்:** நிலம் மற்றும் கட்டிடம் ஆகியவற்றின் மதிப்பு சேர்க்கப்படமாட்டாது. இயந்திரங்களின் மதிப்பை மட்டுமே கணக்கிட்டு மானியம் வழங்கப்படும்

**கேள்வி 32:** 'பழைய இயந்திரங்களை' நிறுவி உற்பத்தியை துவங்கும் நிறுவனங்களுக்கு முதலீட்டு மானியம் வழங்கப்படுமா ?

**பதில்:** மானியம் வழங்கப்படமாட்டாது. எனினும் நாட்டில் முதன் முறையாக இறக்குமதி செய்யப்பட்டு குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் இயங்கும் நிலையில் உள்ள இயந்திரங்களை நிறுவி உற்பத்தியில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு மானியம் வழங்கப்படும்.

**கேள்வி 33:** மத்திய அரசின் மானியத் திட்டங்களில் மானியம் பெற தகுதி உள்ள நிறுவனங்களுக்கு மாநில அரசின் மானியம் கிடைக்குமா ?

**பதில்:** மத்திய அரசு மானியம் பெறும் நிறுவனங்கள் மாநில அரசிடம் இருந்து வேறுபாட்டுத் தொகையை மானியமாக பெற வாய்ப்பு உள்ளது.

**கேள்வி 34:** ஏற்கனவே இயங்கி வரும் தொழிலகங்களுக்கு சிறுதொழில் கொள்கையில் என்ன சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது ?

**பதில்:** ஏற்கனவே இயங்கி வரும் தொழிலகங்கள் தங்களின் உற்பத்தி அதிகரிக்க நிறுவும் இயந்திரதளவாடங்களின் மதிப்பின் அடிப்படையில் மானியம் வழங்கப்படும். இதற்கு உற்பத்தி உயர்வு 25 விழுக்காட்டிற்கு அதிகமாகவும், நிறுவப்பட்ட இயந்திரங்களின்



மதிப்பு, ஏற்கனவே நிறுவப்பட்ட இயந்திரங்களின் மதிப்பை விட 25 சதவீதம் கூடுதலாக இருக்க வேண்டும்.

**கேள்வி 35:** மானியங்கள் பெற விண்ணப்பிக்கும் கால வரையறை எவ்வளவு ?

**பதில்:** வணிக உற்பத்தியை துவங்கிய தேதியில் இருந்து 6 மாதத்திற்குள் மானிய விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட மாவட்ட தொழில் மையங்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மின் மானியங்களை பொறுத்த வரை உற்பத்தி துவங்கிய தேதி அல்லது மின் இணைப்பு பெற்ற தேதி ஆகியவற்றிலிருந்து 3 மாதங்களுக்குள் மாவட்ட தொழில் மையங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். மாவட்ட தொழில் மையங்களில் விலாசம் இணைப்பு 1ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**கேள்வி 36:** தொழில் கொள்கையில் ஏற்றுமதி உதவிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா ?

**பதில்:** பெருந்தொழில்களுக்கான புதிய தொழில் கொள்கை 2007 நமது மாண்புமிகு முதல்வர் அவர்களால் 5.11.2007 அன்று வெளியிடப்பட்டது அதில் தமிழகத்தின் ஆண்டு ஏற்றுமதி மதிப்பை சுமார் ரூ.65,000 கோடி என்ற அளவில் இருந்து ரூ.1,40,000 கோடி என்ற அளவிற்கு உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டு தொழில் வணிகத் துறையின் ஆணையர், ஏற்றுமதி ஆணையராக நியமிக்க அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட தொழில் மையங்களில் செயல்படும் ஏற்றுமதி வழிகாட்டு மையங்கள் FIEO என்ற நிறுவனத்துடன் இணைத்து மேம்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஏற்றுமதியை மேம்படுத்த தனியாக ஏற்றுமதி கொள்கை வெளியிடப்படும் என அரசு அறிவித்துள்ளது.

**கேள்வி 37:** தொழில் குழும மேம்பாட்டிற்காக சிறுதொழில் கொள்கையில் அறிவிக்கப்பட்ட கருத்து என்ன ?

**பதில்:** குழும திட்ட மேம்பாட்டிற்கான திட்ட மதிப்பீட்டில் 25 சதவீதம் அதிகபட்சமாக ரூ.1 கோடி வரை தமிழக அரசு மானியம் வழங்க திட்டமிட்டுள்ளது.

**கேள்வி 38:** தொழில்நுட்ப மேம்பாட்டிற்காக கொள்கையில் அறிவிக்கப்பட்ட சலுகைகள் என்ன ?

**பதில்:** ஏற்கனவே இயங்கி கொண்டு வரும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தங்களது தொழிலகத்தின் தொழில்நுட்பத்தை மேம்பாடு செய்து கொள்ள பெறும் ரூ.1 கோடி வரையிலான கடன்களுக்கு 3 சதவீதம் வட்டிமானியம் அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் வரை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**கேள்வி 39:** தொழில் நுட்ப வணிக சேவை வளர்ப்பகங்கள் அமைக்க தொழில் கொள்கையில் வழிவகை செய்யப்பட்டுள்ளதா ?

பதில் தொழில் நுட்ப வணிக வசதி வளர்ப்பகங்கள் அமைக்க மையம் ஒன்றுக்கு அதிகபட்சம் ரூ.50 இலட்சம் அரசு வழங்கும்.

**கேள்வி 40:** உரிமைகாப்பு மற்றும் அறிவு சார் சொத்துரிமைக்கான மானியங்கள் யாவை ?

**பதில்:** உரிமைகாப்பு பதிவு செலவில் 50 விழுக்காடு அல்லது ரூ.2 இலட்சம் மானியமாக வழங்கப்படும்.



**கேள்வி 41:** வணிக குறியீடு பதிவு செய்யும் முயற்சிக்கு மானியம் வழங்கப்படுமா ?

**பதில்:** வணிக குறியீடு பதிவு செய்வதற்காக ஆகும் செலவில் 50 சதவீதம் அதிகபட்சமாக ரூ.25,000/– வரை மானியம் வழங்கப்படும்.

**கேள்வி 42:** சிறு தொழில் நிறுவனங்களின் சந்தை மேம்பாட்டிற்காக நடத்தப்படும் கருத்தரங்கு மற்றும் கண்காட்சிக்கு வழங்கப்படும் மானியங்கள் யாவை ?

**பதில்:** இதர மாநிலங்கள் மற்றும் சென்னையில் நடத்தப்படும் கண்காட்சிகளுக்கு ஆகும் செலவில் 50 சதவீதம் அல்லது அதிகபட்சம் ரூ.5 இலட்சம் வரையிலும் தமிழகத்தில் ஏனைய மாவட்டங்களில் நடத்தப்படும் கண்காட்சிகளுக்கு ஆகும் செலவில் 50 சதவீதம் அல்லது அதிகபட்சம் ரூ.1 இலட்சம் வரையிலும் மானியம் வழங்கப்படும்.

**கேள்வி 43:** சிறுதொழில் சங்கத்தினர் செயல்திறன் மேம்பாட்டிற்காக நடத்தும் பயிற்சி திட்டத்திற்கு அரசு மானியம் வழங்குமா ?

**பதில்:** பயிற்சி கட்டணத்தில் 50 விழுக்காடு மானியமாக வழங்கப்படும்.

**கேள்வி 44:** குறு மற்றும் சிறு தொழில்களின் சந்தை வாய்ப்பிற்கு அரசு கொள்முதல்களில் உதவி என்ன ?

**பதில்:** அரசு கொள்முதல்களில் 15 விழுக்காடு விலை முன்னுரிமை

மற்றும் பிணை வைப்பு தொகை விலக்கு ஆகிய சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

**கேள்வி 45:** குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமைக்க அரசின் பல்வேறு துறைகளிடமிருந்து ஒப்புதல் பெற்று அளிக்க உதவி வழங்கப்படுமா ?

**பதில்:** குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமைக்க தேவையான பல்வேறு அரசு சார் உரிமங்கள் மற்றும் அனுமதிகளை சம்மந்தபட்ட மாவட்ட தொழில் மையங்கள் பெற்று தர உதவுகின்றன.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் கொள்கையில் இந்த முயற்சிக்கு சட்ட அந்தஸ்து வழங்கும் வகையில் ஒற்றைச்சாளர தீர்வு சட்டம் இயற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**கேள்வி 46:** குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் புனரமைக்க என்ன உதவி வழங்கப்படும் ?

**பதில்:**

- நலிவுற்ற நிறுவனத்தின் நிலுவை விற்பனை வரி / மதிப்பு கூடுதல் வரி அவற்றின் மீதான வட்டி ஆகியவற்றை மென் கடனாக மாற்றவும் அக்கடனை 9 விழுக்காடு வட்டியுடன் நான்காண்டுகள் கழித்து திருப்பி செலுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- நலிவுற்ற நிறுவனங்களுக்கு புனரமைப்பு மற்றும் இணைப்பு கடன் ரூ.15 லட்சம் வரை வழங்கவும் தொகையில் 4 விழுக்காடு வட்டி மானியம் 2 ஆண்டுகளுக்கு வழங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.



- புனரமைக்கப்படும் நிறுவனங்களின் வணிக வரிபாக்கி போன்றவற்றை 6 மாதம் தள்ளி வைக்க நடவடிக்கை எடுக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- மத்திய அரசின் அறிவிப்பினையொட்டி தொழிலைவிட்டு வெளியேறும் கொள்கை.
- புனரமைக்க தகுதியற்ற நிறுவனங்களின் மதிப்புகூட்டுவரி நிலுவையை தள்ளுபடி செய்து உதவவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**கேள்வி 47:** தமிழகத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் எந்தெந்த நிறுவனங்களிடம் இருந்து கடன் பெறலாம் ?

**பதில்:**

- தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் (TIIC)
- தாய்கோ வங்கி (TAICO)
- அனைத்து நாட்டுடைமையாக்கப்பட்ட மற்றும் தனியார் வங்கி
- SIDBI எனப்படும் இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி

**கேள்வி 48:** மத்திய அரசின் CLCS திட்டத்தில் வழங்கப்படும் சலுகை என்ன ?

**பதில்:** தொழில் நுட்ப மேம்பாட்டிற்கு 44 வகை தொழில்களுக்கு வட்டி மானியம் அல்லது முதலீட்டு மானியம் பெற வழிவகை உள்ளது.

**கேள்வி 49:** தமிழக அரசின் குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழிற் கொள்கை மான்ய திட்டங்கள் என்று முதல் ஆரம்பிக்கப்படும் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் ?

**பதில்:** 1.8.2006க்கு பின் தொழில் துவங்க ஆரம்ப கட்ட நடவடிக்கை எடுத்து இக்கொள்கை அறிவிக்கப்பட்ட நாளான 22.2.2008 அன்றுக்குப் பின் வணிக ரீதியாக உற்பத்தியை துவங்கும் தொழில்கள் மற்றும் 22.2.2008 க்கு பிறகு ஆரம்பிக்கப்படும் தொழில்கள் ஆகியவை மானியம் பெற தகுதியுடையவையாகும்.

**கேள்வி 50:** குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழிற் கொள்கை மான்ய திட்ட பலன்களை பெறுவதில் சிரமம் இருப்பின் யாரை அணுகலாம் ?

**பதில்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் உயர்நிலைக் குழுவிடம் +தெரிவிக்கலாம்.

*******



**உத்தேச மானியத் தொகையின் கணக்கீடு –** உதாரணம்.

**1. குறுந்தொழில் உறபத்தி நிறுவனங்களுக்கு**

**அ.மூலதன மான்யம்**

அமைக்கப்பட்டுள்ள இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களின் மதிப்பு – ரூபாய் 25 இலட்சங்கள்.

| | |
|---|---|
| தகுதியுள்ள மானியத் தொகை | = ரூ. 25 இலட்சங்கள் X 15 / 100 |
| | = ரூ. 3.75 இலட்சங்கள் |
| பெறப்போகும் மூலதன மான்யத் தொகை | = அதிகபட்சமாக ரூ.3.75 இலட்சங்கள் |

**ஆ. குறைந்த அழுத்த மின்மானியம்**

நிறுவனம் தொடங்கிய நாள் அல்லது மின் இணைப்பு பெற்ற நாள் இதில் பிந்திய நாளிலிருந்து முதல் 36 மாதங்களுக்கு 20 விழுக்காடு என்ற விதத்தில் இந்த மானியம் வழங்கப்படும்.

சுமார் 25 குதிரைத்திறன் மின் இணைப்பு பெற்ற நிறுவனம் 36 மாதங்களுக்கு பெறத்தகுதியுள்ள மின்மானியம் –
**ரூபாய் 1.25 இலட்சங்கள்**

**இ. மதிப்புக்கூட்டு வரிக்கு ஈடான மானியம்**

உற்பத்தி தொடங்கிய முதல் ஆறு ஆண்டுகளுக்கு செலுத்தப்படும் மதிப்புக்கூட்டு வரிக்கு ஈடான தொகை அதிக பட்சம் **ரூபாய் 25 இலட்சங்கள்** மானியத் தொகையாக வழங்கப்படும்.

மேற்கண்ட மானியத் தொகைகளின் மொத்தம் = அ+ஆ+இ

= **3.75** இலட்சங்கள் + ரூ**1.25** இலட்சங்கள் +ரூ.**25** இலட்சங்கள்

= **30** இலட்சங்கள்

மேற்கண்ட மொத்த மானியத் தொகையானது ரூ.**30** லட்சங்கள் என்ற அளவில் உற்பத்தி தொடங்கிய ஐந்து வருடங்களுக்குள் வழங்கப்பட்டு விடும் இதன் மூலம் குறுந்தொழில் நிறுவனங்கள் முதலீடு செய்த தொகையான ரூபாய் 25 இலட்சங்களுக்கு மேலாக மானியங்கள் அரசால் வழங்கப்பட்டு விடும்.

இவை தவிர பின்தங்கிய பகுதிகளில் அமைக்கப்படும் குறு உற்பத்தி நிறுவனங்களுக்கு கூடுதலாக 5 விழுக்காடு வேலை வாய்ப்பு பெருக்க மான்யம் அதிகபட்சம் ரூ.**1.25** இலட்சம் வரையிலும், 5 விழுக்காடு குறிப்பிட்ட வகை தொழில்முனைவோர்க்கான மானியம் அதிகபட்சம் ரூ.**1.25** இலட்சம் வரையிலும், மாசற்ற மற்றும் சுற்றுச் சுழலுக்கு இயைந்த தொழில் நுட்பத்திற்கான கூடுதல் மூலதனமானியம் ஆக மொத்தம் இம்மூன்றையும் சேர்த்து அதிகபட்சமாக ரூ.**3** இலட்சம் வரையிலும் கூடுதல் மான்யம் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**2. பின் தங்கிய பகுதிகளில் அமைக்கப்படும் சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்களுக்கான மானிய உதவிகள்.**

**அ. மூலதன மானியம்**

நிறுவப்பட்டுள்ள தகுதியான இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களின் மதிப்பில் 15 விழுக்காடு, அதிகபட்சமாக **– ரூபாய்.30 லட்சங்கள்.**

**ஆ. வேலை வாய்ப்பு பெருக்க மானியம்**

குறைந்த பட்சம் 25 வேலையாட்களை பணியில் ஈடுபடுத்தும் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் வேலைவாய்ப்பு பெருக்க மானியம் 5 விழுக்காடு அதிகபட்சம் **–ரூபாய் 5 இலட்சங்கள்.**



**இ. குறிப்பிட்ட வகை தொழில் முனைவோர்க்கான கூடுதல் மூலதனமானியம்**

மகளிர், பட்டியிலிடப்பட்ட இனம்/பட்டியிலிடப்பட்ட பழங்குடியினர், உடல் ஊனமுற்றோர் மற்றும் அரவாணியர் ஆகியோர் தொழில் முனைவோராக இருக்கும் நேர்வுகளில் வழங்கப்படும் கூடுதல் மூலதன மானியம் 5 விழுக்காடு அதிகபட்சம் **– ரூபாய் 2 இலட்சங்கள்.**

**ஈ. மாசற்ற மற்றும் சுற்றுச் சுழலுக்கு இயைந்த தொழில் நுட்பத்திற்கான கூடுதல் மூலதனமானியம் அதிகபட்சமாக – ரூபாய்–3 இலட்சங்கள்.**

**உ. குறைந்த அழுத்த மின்மானியம் ( அதிக பட்சம் 150 குதிரைத் திறன்)**

உற்பத்தி துவங்கிய நாள் அல்லது மின் இணைப்பு பெற்ற நாள் இவற்றில் எது பிந்தியுள்ளதோ, அந்நாளிலிருந்து முதல் 36 மாதங்களுக்கு 20 விழுக்காடு என்ற வீதத்தில் வழங்கப்படும் குறைந்த அழுத்த மின் மானியத் தொகை –ரூபாய் 7.5 இலட்சங்கள்.

மேற்கண்ட மானியத்தொகைகளின் மொத்தம் = அ+ஆ+இ+ஈ+உ

= ரூபாய் 30 இலட்சங்கள் + 5 இலட்சங்கள் + 3 இலட்சங்கள் + 2 இலட்சங்கள் + 7.5 இலட்சங்கள் **= 47.5 இலட்சங்கள்**

**வழங்கப்படும் மொத்த மானியத் தொகையின் அளவு = ரூபாய் 47.5 இலட்சங்கள்**

**(ரூ 2 கோடி அளவு இயந்திர தளவாடத்தின் மேல் முதலீடு செய்தாலே ரூ 47.5 இலட்சங்கள் மான்யமாக கிடைக்கும்)**

## இணைப்பு – 1

# தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்கள்

| வ.எண். | அலுவலர் பெயர் மற்றும் முகவரி | தொ.பே. எண் |
|---|---|---|
| 1. | அரசு செயலர்,<br>குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை,<br>தலைமைச் செயலகம், சென்னை 600 009 | 044–2567147 |
| 2. | தொழில் ஆணையர் மற்றும்<br>தொழில் வணிக இயக்குநர்,<br>சேப்பாக்கம், சென்னை 600 005 | 044–28525312 |
| 3. | மண்டல இணை இயக்குநர் (பொ)<br>திரு.வி.க. தொழிற்பேட்டை கிண்டி,<br>சென்னை 600 032 | 044–22336865 |
| 4. | பொது மேலாளர்,<br>மாவட்ட தொழில் மையம்,<br>2, ராஜா தெரு, கோயம்புத்தூர் | 0422–2391678<br>2397311 |
| 5. | பொது மேலாளர்,<br>மாவட்ட தொழில் மையம், கடலூர் | 04142–290116<br>290192 |
| 6. | பொது மேலாளர்,<br>மாவட்ட தொழில் மையம், தர்மபுரி | 04342–230892<br>231081 |
| 7. | பொது மேலாளர்,<br>மாவட்ட தொழில் மையம், திண்டுக்கல் | 0451–2470893 |
| 8. | பொது மேலாளர்,<br>மாவட்ட தொழில் மையம், ஈரோடு | 0424–2275283<br>2275859 |
| 9. | பொது மேலாளர்,<br>மாவட்ட தொழில் மையம், காஞ்சிபுரம் | 044–238837<br>238551 |
| 10. | பொது மேலாளர்,<br>மாவட்ட தொழில் மையம்,<br>கன்னியாகுமரி | 04652–260008 |
| 11. | பொது மேலாளர்,<br>மாவட்ட தொழில் மையம், கரூர் | 04324–254272 |
| 12. | பொது மேலாளர்,<br>மாவட்ட தொழில் மையம், கிருஷ்ணகிரி | 04343–235567 |
| 13. | பொது மேலாளர்(பொ),<br>மாவட்ட தொழில் மையம், மதுரை | 0452–2537621 |
| 14. | பொது மேலாளர்(பொ),<br>மாவட்ட தொழில் மையம், நாகப்பட்டினம் | 04365–241193 |



| | | |
|---|---|---|
| 15. | பொது மேலாளர்,<br>மாவட்ட தொழில் மையம், நாமக்கல் | 954286–277251 |
| 16. | பொது மேலாளர்(பொ),<br>மாவட்ட தொழில் மையம், அரியலூர் | 04329–222363<br>220004 |
| 17. | பொது மேலாளர்(பொ),<br>மாவட்ட தொழில் மையம், புதுக்கோட்டை | 04322–221794 |
| 18. | பொது மேலாளர்,<br>மாவட்ட தொழில் மையம், இராமநாதபுரம் | 04567–230497<br>232329 |
| 19. | பொது மேலாளர்,<br>மாவட்ட தொழில் மையம்,<br>சேலம். | 0427–2448505<br>2447878<br>2443819 |
| 20. | பொது மேலாளர்,<br>மாவட்ட தொழில் மையம், சிவகங்கை | 04575–240257<br>240407 |
| 21. | பொது மேலாளர்,<br>மாவட்ட தொழில் மையம், தஞ்சாவூர் | 954362–<br>255080 |
| 22. | பொது மேலாளர்,<br>மாவட்ட தொழில் மையம், தேனி | 04546–252081 |
| 23. | பொது மேலாளர்(பொ),<br>மாவட்ட தொழில் மையம், நீலகிரி | 0423–2443947 |
| 24. | பொது மேலாளர்,<br>மாவட்ட தொழில் மையம்,<br>திருவள்ளூர் | 27666787<br>27663796 |
| 25. | பொது மேலாளர்(பொ),<br>மாவட்ட தொழில் மையம், திருவாரூர் | 04366–240028 |
| 26. | பொது மேலாளர்,<br>மாவட்ட தொழில் மையம், திருச்சி | 0431–2460823<br>2460331 |
| 27. | பொது மேலாளர்,<br>மாவட்ட தொழில் மையம், திருநெல்வேலி | 0462–2572162<br>2572384 |
| 28. | பொது மேலாளர்,<br>மாவட்ட தொழில் மையம்,<br>திருவண்ணாமலை | 04175–254849 |
| 29. | பொது மேலாளர்(பொ),<br>மாவட்ட தொழில் மையம், தூத்துக்குடி | 0461–2340152<br>2340053 |
| 30. | பொது மேலாளர்,<br>மாவட்ட தொழில் மையம், வேலூர் | 0416–2242512<br>2242413 |
| 31. | பொது மேலாளர்,<br>மாவட்ட தொழில் மையம், விழுப்புரம் | 04146–223616 |
| 32. | பொது மேலாளர்,<br>மாவட்ட தொழில் மையம், விருதுநகர் | 04562–252739 |

# இணைப்பு–2

## மாநிலத்தில் உள்ள பின்தங்கிய வட்டாரங்கள்

**கோயம்பத்தூர் மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 1 | அன்னூர் | 4 | பொங்கலூர் |
| 2 | குடிமங்கலம் | 5 | சுல்தான்பேட்டை |
| 3 | கிணத்துக்கடவு | | |

**கடலூர் மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 6 | அண்ணாகிராமம் | 11 | மங்களூர் |
| 7 | கம்மாபுரம் | 12 | மேல்புவனகிரி |
| 8 | காட்டுமன்னார்கோவில் | 13 | நல்லூர் |
| 9 | குமராட்சி | 14 | பரங்கிப்பேட்டை |
| 10 | குறிஞ்சிப்பாடி | | |

**தர்மபுரி மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 15 | அரூர் | 19 | பாலக்கோடு |
| 16 | காரிமங்கலம் | 20 | பாப்பிரெட்டிபட்டி |
| 17 | மொரப்பூர் | 21 | பெண்ணாகரம் |
| 18 | நல்லம்பள்ளி | | |

**திண்டுக்கல் மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 22 | குஜிலியம்பாறை | 27 | சாணார்பட்டி |
| 23 | நத்தம் | 28 | தொப்பம்பட்டி |
| 24 | நிலக்கோட்டை | 29 | வடமதுரை |
| 25 | ஒட்டன்சத்திரம் | 30 | வேடசந்தூர் |
| 26 | ரெட்டியார்சத்திரம் | | |

**ஈரோடு மாவட்டம்**

| | |
|---|---|
| 31 | அந்தியூர் |
| 32 | குண்டடம் |
| 33 | தாளவாடி |

**காஞ்சிபுரம் மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 34 | அச்சரப்பாக்கம் | 38 | மதுராந்தகம் |
| 35 | சித்தாமூர் | 39 | திருக்கழுக்குன்றம் |
| 36 | குன்றத்தூர் | 40 | உத்திரமேரூர் |
| 37 | லத்தூர் | 41 | வாலாஜாபாத் |



**கன்னியாகுமரி மாவட்டம்**

| | |
|---|---|
| 42 | இராஜாக்கமங்கலம் |
| 43 | திருவட்டாறு |
| 44 | தோவாளை |

**கரூர் மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 45 | அரவக்குறிச்சி | 48 | கிருஷ்ணராயபுரம் |
| 46 | கே.பரமத்தி | 49 | தாந்தோனி |
| 47 | கடவூர் | 50 | தோகைமலை |

**கிருஷ்ணகிரி மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 51 | பர்கூர் | 55 | சூளகிரி |
| 52 | காவேரிப்பட்டினம் | 56 | தளி |
| 53 | கெலமங்கலம் | 57 | ஊத்தங்கரை |
| 54 | மாத்தூர் | 58 | வேப்பனப்பள்ளி |

**மதுரை மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 59 | அலங்காநல்லூர் | 65 | டி.கல்லுபட்டி |
| 60 | செல்லம்பட்டி | 66 | திருமங்கலம் |
| 61 | கள்ளிக்குடி | 67 | திருப்பரங்குன்றம் |
| 62 | கொட்டாம்பட்டி | 68 | உசிலம்பட்டி |
| 63 | மதுரை கிழக்கு | 69 | வாடிப்பட்டி |
| 64 | சேடப்பட்டி | | |

**நாகை மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 70 | கீழையூர் | 75 | சீர்காழி |
| 71 | கீழ் வேலூர் | 76 | தலைஞாயிறு |
| 72 | கொள்ளிடம் | 77 | திருமருகல் |
| 73 | குத்தாலம் | 78 | வேதாரண்யம் |
| 74 | செம்பனார்கோவில் | | |

**நாமக்கல் மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 79 | எலச்சிபாளையம் | 84 | மோகனூர் |
| 80 | எருமைப்பட்டி | 85 | நாமகிரிப்பேட்டை |
| 81 | கபிலர்மலை | 86 | புதுச்சத்திரம் |
| 82 | கொல்லிமலை | 87 | வெண்ணந்தூர் |
| 83 | மல்லசமுத்திரம் | | |

**நீலகிரி மாவட்டம்**

88 கூடலூர்
89 கோத்தகிரி
90 ஊட்டி

**அரியலூர் மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 91 | ஆண்டிமடம் | 94 | செந்துறை |
| 92 | அரியலூர் | 95 | டி. பழூர் |
| 93 | ஜெயங்கொண்டம் | 96 | திருமானூர் |

**பெரம்பலூர் மாவட்டம்**

97 ஆலத்தூர்
98 வேப்பந்தட்டை
99 வேப்பூர்

**புதுக்கோட்டை மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 100 | அன்னவாசல் | 106 | மணல்மேல்குடி |
| 101 | அரிமளம் | 107 | பொன்னமராவதி |
| 102 | ஆவுடையார்கோவில் | 108 | திருமயம் |
| 103 | கந்தர்வகோட்டை | 109 | திருவரங்குளம் |
| 104 | கரம்பக்குடி | 110 | விராலிமலை |
| 105 | குன்னான்டார்கோவில் | | |

**இராமநாதபுரம் மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 111 | போகளூர் | 116 | நயினார்கோவில் |
| 112 | கடலாடி | 117 | ஆர்.எஸ்.மங்கலம் |
| 113 | கமுதி | 118 | திருப்புல்லாணி |
| 114 | மண்டபம் | 119 | திருவாடனை |
| 115 | முதுகுளத்தூர் | | |

**சேலம் மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 120 | அயோத்தியாபட்டணம் | 125 | பெத்தநாயக்கன்பாளையம் |
| 121 | காடையாம்பட்டி | 126 | தலைவாசல் |
| 122 | கொங்கனாபுரம் | 127 | தாரமங்கலம் |
| 123 | மேச்சேரி | 128 | ஏற்காடு |
| 124 | ஓமலூர் | | |

**சிவகங்கை மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 129 | இளையாங்குடி | 134 | எஸ்.புதூர் |
| 130 | காளையார்கோவில் | 135 | சிங்கம்புணரி |
| 131 | கல்லல் | 136 | சிவகங்கை |
| 132 | கண்ணன்குடி | 137 | திருப்பத்தூர் |
| 133 | மானாமதுரை | 138 | திருப்புவனம் |



**தஞ்சாவூர் மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 139 | அம்மாபேட்டை | 144 | பேராவூரணி |
| 140 | பூதலூர் | 145 | சேதுபாவாசத்திரம் |
| 141 | மதுக்கூர் | 146 | திருப்பனந்தாள் |
| 142 | ஒரத்தநாடு | 147 | திருவையாறு |
| 143 | பாபநாசம் | 148 | திருவோணம் |

**தேனி மாவட்டம்**

149 ஆண்டிபட்டி
150 சின்னமனூர்
151 கம்பம்
152 கே. மயிலாடும்பாறை

**தூத்துக்குடி மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 153 | ஆழ்வார்திருநகரி | 159 | சாத்தான்குளம் |
| 154 | கருங்குளம் | 160 | ஸ்ரீவைகுண்டம் |
| 155 | கயத்தாறு | 161 | திருச்செந்தூர் |
| 156 | கோவில்பட்டி | 162 | உடன்குடி |
| 157 | ஒட்டபிடாரம் | 163 | விளாத்திகுளம் |
| 158 | புதூர் | | |

**திருச்சி மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 164 | லால்குடி | 170 | தாத்தையங்கார்பேட்டை |
| 165 | மணச்சநல்லூர் | 171 | தொட்டியம் |
| 166 | மணப்பாறை | 172 | துறையூர் |
| 167 | மருங்காபுரி | 173 | உப்பிலியாபுரம் |
| 168 | முசிறி | 174 | வையம்பட்டி |
| 169 | புள்ளம்பாடி | | |

**திருநெல்வேலி மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 175 | ஆலங்குளம் | 179 | நாங்குனேரி |
| 176 | கடையம் | 180 | பாப்பாக்குடி |
| 177 | குருவிகுளம் | 181 | இராதாபுரம் |
| 178 | மேலநீலிதநல்லூர் | | |

**திருவள்ளூர் மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 182 | எல்லாபுரம் | 186 | ஆர்.கே. பேட்டை |
| 183 | கடம்பத்தூர் | 187 | சோழவரம் |
| 184 | பள்ளிப்பட்டு | 188 | திருவாலங்காடு |
| 185 | பூண்டி | | |

**திருவண்ணாமலை மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 189 | அன்னக்காவூர் | 198 | போளூர் |
| 190 | ஆரணி | 199 | புதுப்பாளையம் |
| 191 | செங்கம் | 200 | தண்டராம்பட்டு |
| 192 | சேத்துப்பட்டு | 201 | தெள்ளாறு |
| 193 | செய்யாறு | 202 | துரிஞ்சாபுரம் |
| 194 | ஜவ்வாதுமலை | 203 | வந்தவாசி |
| 195 | கலசப்பாக்கம் | 204 | வேம்பாக்கம் |
| 196 | கீழ்பெண்ணாத்தூர் | 205 | மேற்கு ஆரணி |
| 197 | பேரணமல்லூர் | | |

**திருவாரூர் மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 206 | கொடவாசல் | 210 | நீடாமங்கலம் |
| 207 | கொரடாச்சேரி | 211 | திருத்துறைப்பூண்டி |
| 208 | கோட்டூர் | 212 | வலங்கைமான் |
| 209 | முத்துபேட்டை | | |

**வேலூர் மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 213 | அணைக்கட்டு | 219 | நாட்ராம்பள்ளி |
| 214 | ஆற்காடு | 220 | நெமிலி |
| 215 | ஜோலார்பேட்டை | 221 | பேரணாம்பட்டு |
| 216 | கே.வி.குப்பம் | 222 | சோளிங்கர் |
| 217 | கந்திலி | 223 | திமிரி |
| 218 | காவேரிப்பாக்கம் | 224 | திருப்பத்தூர் |

**விழுப்புரம் மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 225 | சின்னசேலம் | 236 | ரிஷிவந்தியம் |
| 226 | செஞ்சி | 237 | சங்கராபுரம் |
| 227 | கள்ளக்குறிச்சி | 238 | திருக்கோயிலூர் |
| 228 | கல்வராயன்மலை | 239 | திருநாவலூர் |
| 229 | காணை | 240 | திருவெண்ணெய்நல்லூர் |
| 230 | கண்டமங்கலம் | 241 | தியாகதுர்கம் |
| 231 | மைலம் | 242 | உளுந்தூர்பேட்டை |
| 232 | மரக்காணம் | 243 | வல்லம் |
| 233 | மேல்மலையனூர் | 244 | வானூர் |
| 234 | முகையூர் | 245 | விக்கிரவாண்டி |
| 235 | ஒலக்கூர் | | |

**விருதுநகர் மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 246 | காரியாபட்டி | 249 | திருச்சுழி |
| 247 | நரிக்குடி | 250 | வெம்பக்கோட்டை |
| 248 | சாத்தூர் | 251 | வத்திராயிருப்பு |



## இணைப்பு–3

## மானியம் பெற தகுதியில்லாத நிறுவனங்கள் / தொழில்கள்

1. சர்க்கரை ஆலைகள்
2. சாராய வடிப்பு சார்ந்த தொழில்கள்
3. மொலாசஸ் / பிரித்தெடுக்கப்பட்ட எரிசாராயம் / மாற்றம் செய்யப்பட்ட எரிசாராயம் இவற்றை மூலப்பொருளாகக் கொண்டு மதுபானம் தயாரித்தல்
4. பாப்கார்ன் மற்றும் ஐஸ்கிரீம் தயாரித்தல்
5. உரம் தயாரித்தல்
6. கலப்பு உரம் தயாரித்தல்
7. கனிமச் சுரங்கம் மற்றும் கனிமங்கள் வெட்டியெடுத்தல்
8. இரும்பு மற்றும் உருக்காலை
9. பீடி, சிகரெட், புகையிலை, சுருட்டு, குட்கா, மற்றும் புகையிலை சார்ந்த பொருட்கள் உற்பத்தி
10. அனைத்து வகை மர அறுவை ஆலைகள்
11. குறு, சிறு மற்றும் நடுத்தர சேவை நிறுவனங்கள்
12. சிமெண்ட் ஆலைகள்
13. ஜவுளி ஆலைகள் ( நூற்பாலை மற்றும் பின்னலாடை உட்பட)
14. மாவு அரைவைத் தொழில்
15. உணவு விடுதிகள்
16. சமையல் எண்ணெய் மற்றும் கரைப்பான்களை உபயோகித்து எண்ணெய் பிரித்தெடுத்தல்
17. அரிசி ஆலை
18. அலுமினிய உருக்காலை
19. கால்சியம் கார்பைடு

20.உணவுக்காக கால்நடைகளை வெட்டும் தொழில்

21. வெல்லம் தயாரித்தல்

22.நிழற்படம் எடுத்தல் மற்றும் வண்ண நிழற்படம் தயாரித்தல்

23.ஒளி அச்சு நகல் எடுத்தல்

24.செய்முறை மற்றும் மதிப்பு கூட்டுதல் மருந்து பொருட்கள் மற்றும் வேதியியல் பொருட்களை மறு பொட்டலம் கட்டுதல்

25.செயற்கை மற்றும் எதிர்வினை புரியக்கூடிய சாயங்கள்

26.பட்டாசு தொழில்

27.வான்வெளியில் ஓசோன் படலத்தை குறைக்கும் பொருட்களை தயாரிக்கும் தொழில்கள்

28.மின்சலவை தொழில்

29.செங்கல் தொழில் (சிமெண்ட் ஹாலோ பிளாக், இயந்திரங்கள் மூலம் மற்றும் நிலக்கரி சாம்பலிலிருந்து தயாரிக்கப்படும் செங்கல் தவிர)

30.கோழிப் பண்ணை

31. காப்பி கொட்டை வறுத்தல் மற்றும் அரைத்தல்

32.கடிகாரம் பழுதுபார்த்தல்

33.ஒளி மற்றும் ஒலி நாடா பதிவு செய்தல்

34.சயனைடு

35.எரிகாரம்

36.பொட்டாசியம் குளோரைடு

37.நைலான் இழை

38.ரேயான் இழை

39.பாலியஸ்டர் இழை

40.அரசு அறிவிக்கக் கூடியவாறான ஏனைய பிற நிறுவனங்கள் / தொழில்கள்

*********